விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 16 செவ்வாய்க்கிழமை (02.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 318

## இன, மத பாகுபாடு தேவையில்லை



அனைவரும் இலங்கையர்கள் ஞானசார தேரர்


3 ஆம் பக்கம் பார்க்க


மின்சார சபை ஊழியர்கள்

## நாடு முழுவதும் இன்று போராட்டம்

5 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி கோட்டாவுக்கு எதிராக கிளாஸ்கோவில் மாபெரும் போராட்டம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவரின் ஸ்கொட்லாந்து வருகையை எதிர்த்தும் மாபெரும் கண்டன போராட்டம் ஒன்று நேற்று புலம்பெயர் ஈழத் தமிழர்களால் கிளாஸ்கோவில் முன்னெடுக்கப்பட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)

கோட்டா அரசை நீக்கி

# புதிய அரசை உருவாக்குவோம்



### சிங்கள ராவய எச்சரிக்கை

(கொழும்பு)

**கோட்டாபய அரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து நீக்கி புதிய அரசாங்கத்தை உருவாக்குவோம் என சிங்கள ராவய எச்சரித்துள்ளது.**

சிங்கள ராவயவின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் இந்த எச்சரிக்கையை நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது 15

முல்லை. ஆண்டான்குளத்தில்

## வயலுக்கு சென்றவர் சடலமாக மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஆண்டான்குளம் பகுதியில் விவசாய நடவடிக்கைக்கு சென்ற குடும்பஸ்தர் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

பூதன்வயல் முள்ளியவளையினை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வேலா 15

காணி அபகரிப்புக்கு எதிராக

## கீரிமலையில் இன்று எதிர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் காணி அபகரிப்புக்கு எதிராக யாழ்.கீரிமலையில் இன்று எதிர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ்.கீரிமலையில் கடற்படையின் தேவைகளுக்காகத் தமிழ்மக்களுக்குச் 15

ஐ.எஸ்.தீவிரவாதத்துடன் தொடர்பு

## 702 இலங்கையர்கள் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

இந்தியாவில் கைது செய்யப் பட்டுள்ள பலம்வாய்ந்த ஐ.எஸ் உறுப்பினர் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்ததாக கூறப்படும் 702 இலங்கையர்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம் பித்துள்ளதாக பயங்கர 15

## தீபாவளி கொத்தணி ஏற்படலாம்

### ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் 15

தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு

## 13ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக கொள்ள முடியாது

### தமிழ் அமெரிக்கர்.கள் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

13ஆவது திருத்தம் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகக் கொள்ள முடியாது என ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக் கர்கள் அரசியல் நடவடிக்கை குழு தெரிவித்துள்ளது.

13ஆம் திருத்தத் 15

## வடக்கு மீனவர் பிரதிநிதிகள்

### இந்தியத் தூதுவருடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதி கடற்பரப்பினுள் இந்திய மீன வர்களது அத்துமீறிய மீன்பிடி நட வடிக்கையினால் ஏற் படும் பாதிப்புகள் 15

ஜனாதிபதி செயலணியில்

## தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளின் நியமனம் அவசியமற்றது

### ஞானசார தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரே நாடு - ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியில் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளின் நிய மனம் அவசியமற்றது.

ஏனெனில் மூவின மக்களின் அரசியல் மற்றும் மதம் சார் பிரச்சினைகளை 15


கூட்டு அரசாங்கம் என்றால்

## இணைந்து தீர்மானங்கள் எடுக்க வேண்டும் - வாசுதேவ

(கொழும்பு)

அனைவரும் இணைந்து கூட்டு அரசாங்கம் உருவாக்கப் பட்டது என்பதனால், நாட்டின் முக்கிய விடயங்கள் தொடர்பில் கூட்டாக தீர்மானங்கள் எடுக்கப் பட வேண்டும் என்பதே தமது கருத்து என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச் சர் வாசுதேவ நாணயக் 15

# மரண அறிவித்தல்



## செல்லையா சற்குருநாதன்

பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகக் கொண்ட செல்லையா சற்குருநாதன் நேற்று முன்தினம் (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தபாலதிபர் செல்லையா - செல்வலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் சந்தியாப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயமலரின் அன்பு கணவரும் காலஞ்சென்ற வைகுந்தநாதன், சிறிறங்கநாதன், அருணகிரிநாதன், ஞானகலாவல்லி, சோமகலாவல்லி மற்றும் சுந்தரகலாவல்லி (கனடா), கருணாகலாவல்லி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுவாமிநாதன், பாலசிங்கம், புஸ்பமலர், தேவபாலன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சற்குணபாலன் மற்றும் சத்தியபாமா (காணி உரித்து நிர்ணய திணைக்களம் - யாழ்ப்பாணம்), சத்தியவதனி, சத்தியவதனன் (நில அளவை உதவியாளர் - மன்னார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாசன், பிரபாகரன் (விஷால் இண்டஸ்ரீஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சஜித், விஷால், கிஷாந், மித்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.11.2021) செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கட்டைமறிச்சான் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-2930)

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

தகவல் :-
குடும்பத்தினர்


## வீடு விற்பனைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குள்
சகல வசதிகளுடன் கூடிய வீடு
விற்பனைக்கு உண்டு.
**தரகர் தேவையில்லை.**

தொடர்பு
**077 042 4050**

(8464)

## வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள
வீட்டுத் தளபாடங்கள்
உடன் விற்பனைக்குண்டு.

**077 042 4050**

(8465)




## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
### நயினாதீவு

**நிறைவேற்று அலுவலர் பதவிக்கான**
**விண்ணப்பம் கோரல்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலில் கடமையாற்றுவதற்கு பின்வரும் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடம் 01. நிறைவேற்று அலுவலர்**

**நிபந்தனைகள்**

1. பல்கலைக்கழகப் பட்டதாரியாக அல்லது அரசசேவைப் பதவிநிலைத் தரத்திலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை 65 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
4. இந்து சமயத்தவராகவும் சமய ஆசாரசீலராகவும் இருத்தல் வேண்டும்.
5. கோவிலின் சூழலில் தங்கியிருந்து பணியாற்றக்கூடியவராக இருத்தல்வேண்டும்.
6. மும்மொழிப் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) புலமையுடையவராக இருத்தல் வேண்டும்.
7. சிறந்த தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
(ஓய்வுநிலையுடையவர்கள் விண்ணப்பிக்கும்போது தேக ஆரோக்கியத்தினை உறுதிப்படுத்தி வைத்திய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.)

**தங்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை "செயலாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் 15.11.2021 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.**


**திரு. ந.மோகனரூபன்,**
செயலாளர், அறங்காவலர் சபை,
*ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.*

(C 2928)

## 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி | 8ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்
**திரு. கோணையா தியாகராஜா**
மலர்வு : 29.07.1930 உதிர்வு : 12.11.2020



அமரர்
**திருமதி. நாகரெட்ணாம்பாள் தியாகராஜா**
மலர்வு : 25.07.1933 உதிர்வு : 04.05.2013

ஈழத்து சிதம்பர நடராஜர் பெருநிழலில் வந்துதித்த சேவையின் சிகரம் கோணையா தியாகராஜா எனும் நற்பணியாளனுக்கு
இராமனுக்கேற்ற சீதாபிராட்டிபோல் புவிமீதிசை கொய்யாத்தோட்ட ஞானசெல்வ விநாயகர் திருவடி தினம் தொழுதேற்றும்
நாகரெட்ணாம்பாள் எனும் நல்லாளை கரம்கொண்ட முத்தான இருவரையும் இந்நாளில் மலர்தூவி நினைந்தேற்றுவோமே.

இல. 25, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(8461)

# கொரோனா வைரஸின் புதிய வகை பிறழ்வு இலங்கைக்குள் நுழையும் அபாயம்

## பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸின் A.30 என்ற புதிய வகை பிறழ்வு இலங்கைக்குள் நுழையும் அபாயம் இருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ள அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, ஏனைய நாடுகளில் முன்னர் கண்டறியப்பட்ட அனைத்து கொரோனா வைரஸின் பிறழ்வுகளும் குறுகிய காலத்திற்குள் இலங்கையில் கண்டறியப்பட்டதாக தெரிவித்தார்.

அதேபோல, இந்த புதிய மாறுபாடும் நாட்டில் எந்த நேரத்திலும் அடையாளம் காணப்படலாம்.

இந்த புதிய மாறுபாடு நாட்டிற்குள் நுழைந்து பரவத் தொடங்கினால், நிச்சயமாக ஒரு பேரழிவு சூழ்நிலை ஏற்படும் என அவர் எச்சரித்தார்.

எனவே, சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு பொதுமக்களை அவர் வலியுறுத்தினார். (நி-5)

# இன, மத ரீதியான பாகுபாடு தேவையில்லை

## நாம் எல்லோரும் இலங்கையர்கள் என்கிறார் ஞானசார தேரர்

(கொழும்பு)

ஒரே நாடு ஒரே சட்டம்" என்பதற்கான ஜனாதிபதி செயலணிக்கு தமிழ் பிரதிநிதி ஒருவர் அவசியம் என்பதை தாம் ஏற்றுக் கொள்வதாக அதன் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இந்தச் செயலணி தொடர்பில் காணொளி ஊடாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தமிழ் தேசிய அரசியல் தரப்பினர் தங்களுக்கான வாக்குகள் குறித்தே கவனம் செலுத்துகின்றனர்.

வடக்கு, கிழக்கில் மத ரீதியான பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனினும், தெற்குடனான மத பிரச்சினை குறித்து கருத்துரைக்கின்றனர்.

தமிழ் மக்களின் அடிப் படை பிரச்சினைகளை தாம் நன்கு அறிந்துள்ளதாகவும் கூறிய தேரர், தற்போது வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஆரம்பத்திலேயே அதில் உள்ள குறைபாடுகளைக் கூறி பிரச்சினைகளை ஏற்படுத்தாமல் முதலில் அதன் திட்டங்களை வகுப்பது முக்கியமானதாகும்.

அதேநேரம் நாட்டில் சிறுபான்மை என்று ஒரு இனம் இல்லை.

இலங்கையர்கள் என்ற இனம் மாத்திரமே இருப்பதாகவும், இன ரீதியாக யாரையும் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். (நி)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை- பளை

## இயக்கச்சி சந்தை வளாகக் கடைகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2022

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 02.11.2021 தொடக்கம் 16.11.2021 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 16.11.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 16.11.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | VS – 03 | 75,000.00 | 7,500.00 | 2,000.00 |
| 02 | VS – 04 | 75,000.00 | 7,500.00 | 2,000.00 |
| 03 | PS – 04 | 150,000.00 | 15,000.00 | 2,000.00 |
| 04 | PS – 06 | 120,000.00 | 12,000.00 | 2,000.00 |
| 05 | PS – 07 | 120,000.00 | 12,000.00 | 2,000.00 |
| 06 | PS – 08 | 105,000.00 | 10,500.00 | 2,000.00 |
| 07 | PS – 10 | 105,000.00 | 10,500.00 | 2,000.00 |
| 08 | PS – 11 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 09 | PS – 12 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 10 | PS - 13 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |
| 11 | PS - 14 | 96,000.00 | 9,600.00 | 2,000.00 |

நிபந்தனைகள்

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 16.11.2021 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும் குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும் தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
06. கேள்வி சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகெள்ளவேண்டும்
07. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. சித்திகரகுத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்தவேண்டும்.
09. VS-03, VS-04 ஆகிய கடைகள் மரக்கறி மற்றும் பழ வியாபாரத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**
**02.11.2021**

(C-2925)

# உள்ளக முரண்பாடுகள் தீவிரம் அமைச்சரவையில் மாற்றங்கள் வரலாம்

## அரசியல் ஆய்வாளர்கள் கருத்து

(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் யுகதனவி மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தம் தொடர்பில் அமைச்சரவை பத்திரம் ஒன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அமைச்சர்களின் கருத்துக்களை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்கும் செயற்பாட்டிற்கு எதிராக சமகால அரசாங்கத்தின் செயற்பாடு குறித்து மூன்று அமைச்சர்கள் வெளியிட்ட கருத்து தொடர்பில் நாமல் அதிருப்தி வெளியிட்டார்.

அதேவேளை அரசாங்கத்துடன் இருந்து கொண்டு அரசாங்கத்திற்கு எதிராகவே சில அமைச்சர்கள் கருத்து வெளியிடுவதாகவும் அவர் குறிப்பிட்டார். அமைச்சரவையின் போது கருத்துக்களை முன்வைக்காமல் வெளியில் சென்று பேசுவது தவறு எனவும் அவர் தெரிவித்தார். இந்நிலையில் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோரே யுகதனவி மின் உற்பத்தி செயற்பாட்டுக்கு எதிராக கருத்து வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை அமைச்சர்களே விமர்ச்சிக்கும் நிலைமை காரணமாக உள்ளக முரண்பாடுகள் தீவிரம் அடைந்துள்ளன. இதன்காரணமாக விரைவில் அமைச்சரவையில் மாற்றங்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (நி)

# வாக்காளர் இடாப்பு பிரதிகளை இணையத்தில் பெறமுடியும்

(கொழும்பு)

வாக்காளர் இடாப்பு பிரதிகளை இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

www.slelection.gov.lk எனும் இணையத்தள முகவரிக்குள் பிரவேசித்து வாக்காளர் இடாப்பு பிரதியை பெற்றுக்கொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். (நி)

# தொடரும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் சமையல் எரிவாயுக்கான விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் சில இடங்களில் தற்போதும் எரி வாயுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சில இடங்களில் சமையல் எரிவாயு பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். (நி-5)

## ஆண்களுக்கான எல்லே போட்டி

# கரவெட்டி இளைஞர் அணி சம்பியன்

யாழ்.மாவட்ட பிரதேச செயலக இளைஞர் கழகங்க ளுக்கிடையிலான ஆண்க ளிற்கான எல்லே போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீ கரித்துக் கொண்டது.

யாழ்.மாவட்ட பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான ஆண்களி ற்கான எல்லே போட்டி கடந்த சனிக் கிழமை அல்வாய் மனோகரா விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடை பெற்றது. இதன் இறுதியாட்டத்தில் கர வெட்டி பிரதேச செயலக இளைஞர் அணியை எதிர்த்து மணற்காடு பிர தேச செயலக இளைஞர் அணி மோதி யது.



முதலில் துடுப்பெடுத்தாடிய மணற் காடு பிரதேச செயலக இளைஞர் அணி நிர்ணயிக்கப்பட்ட 30 பந்து களில் 2 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கர வெட்டி பிரதேச செயலக இளைஞர் அணி 10 பந்துகளில் 3 ஓட்டங்களைப் பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (4-90)


# சேவைநலன் பாராட்டு



## திருமதி
## சாந்தா வரதராசா

( ஆசிரியை - இந்துசமயம் SLTS - I )

சேவை விபரம்

யா/ கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை
- 29.03.1990 - 08.03.2010
யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
- 09.03.2010 - 02.11.2021

அமைதியின் இருப்பிடமாய்
சாந்தத்தின் உறைவிடமாய்
பள்ளிதனில் வலம்வந்தவரே!
பாலகருக்கு பாங்காய் அறிவினையும்
ஞானத்தையும் புகட்டியவரே!
கால்மிதித்து புல்சாகா புண்ணியவதியே!
புண்ணியங்கள் கூடிவருகையில்
புதுயுகம் பிறக்கின்றது
புதிய வாழ்வு மலர்கின்றது
வாழ்வில் வசந்தங்கள் வீசிடவும்
பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடனும்
வாழ்ந்திட மணிவிழா நாயகியை
மனதார வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,
பருத்தித்துறை

(C 2932)



# வேலைவாய்ப்பு

தென்மராட்சி வரணியில்
புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற
கைத்தொழில் நிறுவனத்துக்கு
பெண் பணியாளர்கள் தேவை.

**075 668 3117**
**MALBYL Food Products**

(C-2933)



# இலங்கை வங்கி

பின்வரும் கிளையை இடம் மாற்றுவதற்கு
பொருத்தமான கட்டடம் தேவைப்படுகின்றது.
**இலங்கை வங்கி - நல்லூர் கிளை**

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- ஆகக்குறைந்தது 1000 சதுர அடி இட அளவினைக் கொண்டிருப்பதுடன் கீழ்த் தளமாகவும் இருத்தல் வேண்டும். (பகுதிகளாக பிரிக்கப்படாது இருத்தல் வேண்டும்.)
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 35 அடிக்கு மேற்பட்டதாக பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவு இடவசதி காணப்படல் வேண்டும்.
- 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் விநியோக வசதி, இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி சேவை மற்றும் ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாகப் பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைப்பகுதிக்கு தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2'x2')
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு (ஜெனரேட்டர்) 10'x10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்தின் பின்புறம் இருத்தல் வேண்டும். (அவ் அறையானது இரும்பு கம்பி போடப்பட்டு பாதுகாப்பானதாக இருத்தல் வேண்டும்.)
- நீரைச் சேமித்து வைக்க 1000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ளோர் கட்டட வரைபட பிரதிகள் மற்றும் சகல சான்றிதழ்களுடன் 14 நாட்களுக்குள் பின்வரும் விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையில் இடது மேல் மூலையில் "நல்லூர் கிளைக்கு - பொருத்தமான கட்டடம்" எனத் தயவுசெய்து குறிப்பிடவும்.

உதவிப் பொது முகாமையாளர் (வடபிராந்தியம்),
இலங்கைவங்கி, வடபிராந்தியக் காரியால"யம்,
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 3985 / 3126

1975 BOC CALL CENTRE www.boc.lk

(C-1508)

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்


# யாழ்ப்பாணம் மாநகர சபை

**யாழ்ப்பாணம் நவீன சந்தையின் மேற்றளத்தின் நிலப்பகுதிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான விலை மனுக்கோரல்**

1. யாழ்ப்பாணம் நவீன சந்தையின் மேற்றளத்தின் கீழ்வரும் நிலப்பகுதி களை நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| நிலப்பகுதி | தரைப்பிரதேசம் (சதுர அடி) | அடிப்படை விலை (ரூபா) | மாதாந்த வாடகை (ரூபா) | பிணைமுறி (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| A | 3440 | 20,400,000.00 | 85,000.00 | 300,000.00 | 08.02.2022 |
| B | 3440 | 20,400,000.00 | 85,000.00 | 300,000.00 | 08.02.2022 |

2. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களில் அதிகூடிய அடிப்படை விலையைக் கவனத்தில் கொண்டு குத்தகைதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
3. கேள்விதாரர் பின்வரும் நிபந்தனைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.
   i. தங்களின் தேவைக்கேற்ற வகையில் அப்பகுதியை மாற்றியமைக்க முடியும். (கூரை திருத்த வேலை மட்டும் மாநகர சபையால் மேற் கொள்ளப்படும்)
   ii. ஒப்பந்தகால முடிவில் எந்தவித நிபந்தனையுமின்றி மாநகர சபைக்கு கையளித்தல் வேண்டும்.
   iii. தங்களது வியாபாரத்தின் தன்மைக்கேற்ப கழிவகற்றும் செயற் பாட்டிற்கு வசதியாக வரைபடத்தில் Open to Sky எனக் குறிப்பிடப் பட்ட பகுதியில் தங்களது சொந்த செலவில் கழிவகற்றும் தொட் டியை அமைக்க முடியும். அத்தொட்டியில் சேர்க்கப்படும் கழிவை கட்டணம் செலுத்தி அகற்றிக் கொள்ளலாம். தங்களது பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மலசலகூடத்தின் பராமரிப்பு பணிகள் தங்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள் குறித்த விபரங்கள் உள்ளடக்கிய விண்ணப்பங்களை, மீளளிக்கப்படாத ரூபா 2000/= இனை செலுத்தி மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் 2021.11.03ஆம் திகதி முதல் 2021.11.23ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 மணி வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.
5. விண்ணப்பதாரர் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகையை பிணைமுறியாக செலுத்துதல் வேண்டும்.
6. விலை மனுக்களை **ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் / நானாவித இறைவரிப்பகுதியில் கேள்விப் படிவங்களை ஏற்கும் பெட்டியில் இடுமாறு கோரப்படுகின்றது. அத்துடன் தபால் உறையின் மேல் மூலையில் கேள்வியின் விபரம் குறிப்பிடப்பட் டிருத்தல் வேண்டும்.
7. விலை மனுக்களை ஏற்றல் 2021.11.24ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முடிவடைந்ததுடன் மாநகர சபையின். பௌதிக திட்டமிடல் கேட்போர் கூடத்தில் 2021.11.24ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக் கப்பட்ட பிரதிநிதிகள் இதற்கு சமுகமளிக்கலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
8. இதுபற்றிய மேலதிக தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் தேவைப் படின் யாழ்ப்பாணம் மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியின் **021 -221 5978** தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது அலுவலக நேரங்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 வரை நேரில் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
பெறுகைக்குழு,
யாழ்ப்பாணம் மாநகர சபை

(C-2927)

# இராசிபலன்

02.11.2021
ஐப்பசி 16, செவ்வாய்க்கிழமை
துவாதசி முற்பகல் 9.05 மணிவரை
உத்தரம் முற்பகல் 10.01 மணிவரை
சுபநேரம்- 10.34-12.04 மணிவரை
இராகு காலம்- 3.04-4.34 மணிவரை
சந்திராஷ்டமம்- பூரட்டாதி
பிரதோச விரதம், அமிர்த சித்தம்

வளவன்

**மேஷம்** – மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கலகலப்பான செய்திகள் காலைப்பொழுதே வந்து சேரலாம்.

**ரிஷபம்** – வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும், பாராட்டும் புகழும் கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்** – நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** – குடும்பத்தினரின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** – பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய அனுபவங்கள் ஏற்படலாம்.

**துலாம்** – பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகள் ஏற்படலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம்.

**விருச்சிகம்** – சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** – குடும்பத்தில் ஒற்றுமை கூடும், கௌரவம், அந்தஸ்து உயரும், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**மகரம்** – குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம்.

**கும்பம்** – எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மீனம்** – தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம்.

அன்பு இல்லாத மனம் ஈரம் இல்லாத களிமண் போல் இறுகிப்போகும்

# நாளை நாடு முழுவதும்
# மின்சார சபை ஊழியர்கள் போராட்டம்

(கொழும்பு)


**நாடு முழுவதும் உள்ள மின்சார சபை ஊழியர்கள் நாளை 3 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் ஒன்றுகூடி பெரும் போராட்டத்தை நடத்தவுள்ள நிலையில் நாட்டில் 48 மணி நேரங்களுக்கு மின் விநியோகத்தில் இடையூறுகள் ஏற்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.**

ஏதேனும் காரணங்களால் மின்சாரம் துண்டிக்கப்பட்டால் அதனை சரி செய்ய போராட்ட காலப்பகுதியில் கிட்டத்தட்ட 48 மணிநேரங்களுக்கு ஊழியர்கள் யாரும் வர மாட்டார்கள் என இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த கூட்டு தொழிற் சங்கத்தின் இணைப்பாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை காலை கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறான போராட்டத்தால் கெரவலப்பிட்டி - யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் அமெரிக்க நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யும் என நம்புகிறீர்களா? எனக் கேட்டபோது, அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பை வெளியிடும் போது அரசாங்கம் நிச்சயமாக அதற்குச் செவிசாய்த்தே ஆக வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# கிணற்றில் தவறி விழுந்த பசு கடும் போராட்டத்தின் பின் மீட்பு



(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பகுதியில் உள்ள கோயில் கிணறு ஒன்றில் தவறி வீழ்ந்த பசுமாடு ஒன்று கடும் போராட்டங்களின் பின் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்று திருநெல்வேலி எரிபொருள் நிரப்பு நிலையம் அருகே உள்ள 40 அடி ஆழமான கோயில் கிணற்றுக்குள் பசுமாடு ஒன்று தவறுதலாக விழுந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ். மாநகர சபையினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து யாழ். மாநகர தீயணைப்பு படையினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து கடும் போராட்டத்தின் பின் மாட்டை மீட்டனர். (4-5)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை- பளை

இறைச்சிக்கடைகள் மற்றும் பழைய முள்ளிப்பற்று
உப அலுவலகத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான
கேள்வி அறிவித்தல்-2022

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 02.11.2021 தொடக்கம் 16.11.2021 பிற்பகல் 2.00 மணி வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 16.11.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 16.11.2021 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்
இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 1,931,160.00 | 38,000.00 | 2,000.00 |
| 02 | கோழி இறைச்சிக்கடை | 806,850.00 | 16,000.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 68,200.00 | 5,000.00 | 2,000.00 |
| 04 | கருவாட்டுக்கடை | 13,750.00 | 5,000.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 05 | கோழி இறைச்சிக்கடை | 68,200.00 | 5,000.00 | 2,000.00 |
| 06 | பழைய முள்ளிப்பற்று உபஅலுவலகம் | 90,000.00 | 5,000.00 | 2,000.00 |

நிபந்தனைகள்

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 16.11.2021 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகை ரூபா. 300,000.00 இற்கு உட்பட்ட தொகையாயின் கேள்வித்தொகையின் 1/2 பகுதியையும், ரூபா. 300,000.00 இற்கு மேற்பட்ட தொகையாயின் 1/3 பகுதியையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ள வேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
09. மாட்டிறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சுப்பிரமணியம் சுரேன்
தவிசாளர்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

02.11.2021

(C-2926)

# 100 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையான மரம் வெட்டி வீழ்த்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

**நவாலி சென்.பீற்றர் தேவாலயத்திற்கு முன்னால் வீதியோரத்தில் உள்ள பழைமை வாய்ந்த வாகை மரம் ஒன்றை வெட்டும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.**



இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில், ஆனைக்கோட்டையில் இருந்து நவாலி ஊடாக காரைநகர் செல்லும் வீதியின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக வீதியோரத்தில் உள்ள 100 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த வாகை மரத்தை வெட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அந்த மரத்தை வெட்டுவதற்கு வந்தனர்.

இதனை அறிந்த அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் சிலர் மரத்தை வெட்ட வேண்டாம் என எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனால் குறித்த மரத்தை வெட்டாமல் திரும்பிச் சென்றனர். இந்நிலையில் மீண்டும் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் மரம் வெட்டும் வேலைத் திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. (4-5-33-104)

## அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில் 2021.10.27 ஆம் திகதியன்று வெற்றிடம் ஏற்பட்டுள்ள கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தியாலயம் (வகை- II) குடத்தனை றோ.க.த.க.பாடசாலை (வகை- II) ஆகிய பாடசாலைகளுக்கான அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக இலங்கை அதிபர் சேவையில் சேவையாற்றுபவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் தாபனப்பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் 10.11.2021 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் அறிவித்துள்ளார். (4-5)


## வடக்கில் நாளை வரை மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)


வடக்கில் நாளை வரை மழை நீடிக்கும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த 27 ஆம் திகதி வங்காள விரிகுடாவில் உருவான தாழமுக்கமானது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து தற்பொழுது சிலாபத்திற்கு 67 கிலோமீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளது.

இந்த தாழமுக்கமானது தற்போது சிலாபத்திற்கு மேற்காக நிலை கொண்டிருப்பதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பாகங்களுக்கும் தொடர்ச்சியாக



நாளை வரை மழை பெய்வதற்கான வாய்ப்பு காணப்படுவதாக தெரிவித்தார். (4-5-33)



வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வடக்கில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

(படம்- சிவசாந்தன், சுபேசன், கஜிந்தன்)

## வல்வெட்டித்துறை சுற்றிவளைப்பில் கைதான 12 பேருக்கும் விளக்கமறியல்

(கரணவாய்)

வல்வெட்டித்துறை பகுதியில் உள்ள வீடு ஒன்று கடந்த சனிக்கிழமை இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டதில் 12 பேர் கைது செய்யப்பட்டதுடன் நான்கு வாள்கள் மீட்கப்பட்டன.

வல்வெட்டித்துறை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் போதைப் பொருள் பாவனை இடம்பெறுவதாக இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த பகுதிக்குச் சென்று சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதன்போது நான்கு வாள்கள் மீட்கப்பட்டதுடன் அவ்வீட்டில் இருந்த 12 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸில் பாரப்படுத்தப்பட்டனர்.

அவர்களை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.


யாழ்.செய்திகள்

## தேசிய மட்டத்திலான இரு விருதுகள் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு

(குப்பிழான்)

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை தொடர்ச்சியாக இரண்டாவது தடவையும் தேசிய ரீதியில் வெளி நோயாளர் காயம் தொடர்பான கண்காணிப்பிற்காக (OPD Injury Surveillance) முதல் இடத்தினையும், விடுதி நோயாளர் பிரிவில் 3 ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற விருது வழங்கும் விழாவில் மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் 2020 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் நிலை பராமரிப்பு வைத்தியசாலைகளில் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை அகில இலங்கை ரீதியில் விருதுகளைப் பெற்றுக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (4-5-18)



சர்வதேச கூட்டுறவு தின விழாவும் ஸ்தாபக தலைவர் அமரர். நடேசு மற்றும் முன்னாள் பொது முகாமையாளர் அமரர். க.சந்திரராசா ஆகியோரது நினைவேந்தல் நிகழ்வும் மானிப்பாயில் அமைந்துள்ள வலிகாமம் கூட்டுறவு சங்கங்களின் கொத்தணியின் பொது மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

(படம்-கஜிந்தன்)

# இயற்கையோடு இணைந்து செயற்படுவோம்

## காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் ஜனாதிபதி அழைப்பு



(ஸ்கொட்லாந்)

இயற்கைக்கு எதிராக மனிதர்கள் செயற்படுவதற்குப் பதிலாக, அதனோடு மிகவும் இணைந்து செயற்பட வேண்டும். நிலையான அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட புதிய விவசாயப் புரட்சியொன்று அவசியம் என்று ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்தார்.

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டுக்கு இணையாக "நைதரசனை மீண்டும் கண்டுபிடித்தல், காலநிலை மாற்றம், சுகாதார உயிரியல் பன்முகத்தன்மை மற்றும் நிலையான பொருளாதாரத்துக்கான தீர்வுகள் மற்றும் இணைச் செயற்பாடுகள்" என்ற தலைப்பின் கீழ் இலங்கை ஏற்பாடு செய்திருந்த விசேட கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நவீன, விஞ்ஞான பொறிமுறைகள் மற்றும் பண்டைய வழிமுறைகள் ஊடாக, சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதே தற்போது எமக்கு உள்ள சவாலாகக் காணப்படுகின்றது. இலங்கையில் பல தசாப்தங்களாக சிறுநீரக நோய் பரவுவது பாரிய பிரச்சினையாக உள்ளது.

இரசாயனப் பசளையை அதிகளவில் பயன்படுத்துவதே இதற்கு மிக முக்கிய காரணமாகியுள்ளது என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இச்சூழ் நிலையிலேயே இரசாயனப் பசளை இறக்குமதியைக் குறைப்பதற்கும் சேதன விவசாயத்தை அதிகளவில் ஊக்குவிப்பதற்கும் எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது" என்றும் குறிப்பிட்டார்.

எதிர்காலச் சந்ததியினருக்காகவே, இந்தப் பூமியின் பாதுகாவலர்களாக நாம் அனைவரும் இன்று வாழ்ந்து வருகின்றோம்.

இயலுமான வகை யில் அதற்குப் பங்களித்து, சுகாதார நலனை. உறுதி செய்து கொள்வதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அனைவரும் ஒற்றுமையாகவும் நல்லெண்ணத்துடனும் இதனை நடைமுறைப்படுத்துவோமாயின், மக்களுக்கும் எமது பூமிக்கும் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# வடக்கு ஆளுநர் அலுவலக முன்றலில் சுகாதார தொண்டர்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் வடக்கு ஆளுநர் அலுவலக முன்றலில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றிய 970 பேரில் 349 பேருக்கு அவர்களது சேவைக்கால அடிப்படையில் அரச நியமனத்துக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அதில் ஏனையோருக்கு நியமனம் வழங்கப்படாத நிலையில் தமக்கும் குறித்த நியமனத்தை வழங்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். தாங்களும் நீண்ட காலமாக சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றியிருக்கிறோம். மொத்தமாக 970 பேர் வடக்கு மாகாணத்தில் உள்ளோம்.

ஆனால் 349 பேருக்கு மாத்திரமே நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. ஆயினும் தற்போது எமக்குரிய நியமனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

எனவே வடக்கு மாகாணத்தில் உள்ள 970 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு புதிய ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(4-5-33-104)

# அசண்டையீனமாக நடந்தால் தொற்று மீண்டும் அதிகரிக்கலாம்



(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்து கொரோனா வைரஸ் தொற்று நிலவுவதால் மக்கள் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி இராணுவ மருத்துவமனையில் நேற்று திங்கட்கிழமை காலை இராணுவத்தினருக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளாவிடின் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

**NOTICE**

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)
WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION

POST OF SECRETARY (FULL TIME)- ON CONTRACT BASIS -01 VACANCY

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above mentioned post under OTS- AHEAD Operation from suitably qualified persons up to 12.11.2021.

Applicants are requested to visit Jaffna University website www.jfn.ac.lk for further details

Registrar (C-2924)

அன்புள்ள அப்பாவுக்கு...

(மூன்றாம் ஆண்டு நினைவு)



எம்மோடு 08 II 1936

அவனோடு 05 II 2018

பண்டிதர் சிதம்பரப்பிள்ளை வேலாயுதம்

[ஓய்வுநிலை அதிபர்]

(திதி: ஐப்பசி அபரபக்க திரயோதசி)

சந்நிதி வேலனைச் சந்ததம் உன்னியே
வந்தனை செய்துமே வாயார– முந்தியே
கந்தன் பணிகளைச் செவ்வனே செய்துமே
பந்தம் சுகம்கேட்டீர் தான்

நந்தா விளக்கனைய நாயகரே நம்புலத்தே
முந்தியிருக்க முறையாய் முயன்றவரே– எந்தையே
சிந்தை உமைவிட்டு எங்கேதான் சென்றிடுமோ
வந்திடுமே உம்நினைவு தான்

'திருத்தணிகை'
வதிரி- கரவெட்டி

(C-2916)

குடும்பத்தினர்

# பாரதம் / வெளிநாடு

## ஏழை நாடுகளுக்கு உதவ

# ஆண்டிற்கு 7.5 லட்சம் கோடி ரூபாய் நிதி திரட்டப்பட வேண்டும்

## ஜி- 20 மாநாட்டில் உலகத் தலைவர்கள் உறுதி

(ரோம்)

**பருவநிலை மாற்றத்தினால் பாதிக்கப்படும் ஏழை நாடுகளுக்கு உதவ ஆண்டுக்கு 7.50 இலட்சம் கோடி ரூபாய் நிதியை பணக்கார நாடுகள் திரட்ட வேண்டும் என ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவு மீண்டும் ஜி-20 மாநாட்டில் உறுதி செய்யப்பட்டது.**

ஜி-20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற 2 நாள் மாநாடு முடிவுக்கு வந்தது. இதில் பல்வேறு நாட்டுத் தலைவர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டில் எடுக்கப்பட்ட இறுதி முடிவுகள் குறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,


நிலக்கரி வாயிலாக மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களுக்கு சர்வதேச நாடுகள் நிதி அளிப்பதை இந்த ஆண்டு இறுதிக்குள் நிறுத்திக் கொள்ள அனைத்து நாடுகளும் உறுதி ஏற்க வேண்டும்.

காபனீரொட்சைட் ஏற்படும் காற்று மாசை இந்த நூற்றாண்டின் மத்திக்குள் முற்றிலுமாக தடுக்க முடிவெடுக்கப்பட்டது.

2015 இல் நடந்த பாரீஸ் ஒப்பந்தத்தில் புவியின் தட்பவெப்ப அளவை 2 டிகிரி செல்சியஸ் குறைக்க ஒப்பந்தம் கையெழுத்தானது. அதை 1.5 டிகிரி செல்சியஸ் அளவில் வைத்துக் கொள்ள அனைத்து நாடுகளும் முயற்சி எடுக்க வேண்டும்.

பருவநிலை மாற்றத்தினால் பாதிக்கப்படும் ஏழை நாடுகளுக்கு உதவ ஆண்டுக்கு 7.5 இலட்சம் கோடி ரூபாய் நிதியை பணக்கார நாடுகள் திரட்ட வேண்டும் என ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவு மீண்டும் ஜி-20 மாநாட்டில் உறுதி செய்யப்பட்டது.

இந்த இறுதி முடிவை நிறைவேற்ற தேவையான அனைத்து நடவடிக்கையும் முடுக்கி விடுவதோடு, மாற்றத்துக்கு தங்களை தயார் செய்து கொள்வது, நிதி ஆதாரங்களை திரட்டுவது ஆகிய பணிகளை



உடனடியாக மேற்கொள்ள அனைத்து நாட்டுத் தலைவர்களும் உறுதி அளித்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. (நி-5)

## ஜப்பான் தேர்தல்

# தனிப்பெரும்பான்மையை தக்க வைத்தது ஆளும் கட்சி

(டோக்கியோ)

ஜப்பான் தேர்தலில் ஆளும் லிபரல் டெமாக்ரடிக் கட்சி தனிப் பெரும்பான்மையைப் பிடித்து ஆட்சியயை கைப்பற்றியது.

கூட்டணிக் கட்சியின் ஆதரவு இல்லாமல் லிபரல் டெமாக்ரடிக் கட்சி 233 இற்கும் மேற்பட்ட இடங்களை கைப்பற்றியுள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 465 இடங்களில் 276 இடங்களை லிபரல் டெமாக்ரடிக் கட்சி கைப்பற்றியது. (நி)

# வெள்ளை நிற அரிய சிங்கக்குட்டிகள்



(மாட்ரிட்)


தெற்கு ஸ்பெயினில் உள்ள விலங்குகள் காப்பகத்தில் இரண்டு அரிய வகை வெள்ளை நிற ஆபிரிக்க சிங்கக் குட்டிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிறந்துள்ளன.

இந்த சிங்கக்குட்டிகளின் பெற்றோர்கள் சாதாரண ஆபிரிக்க சிங்கங்கள் ஆகும். எனவே அவைகளிடம் இருந்து வெள்ளை சிங்கங்கள் பிறந்துள்ளமை விலங்கியலாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. உலகளாவிய வெள்ளை சிங்கங்கள் பாதுகாப்பு அறக்கட்டளை இந்த விலங்குகள் அல்பினோக்கள் இல்லை என்றும் இவை தென்னாபிரிக்காவின் குரூகர் தேசிய பூங்காவில் உள்ள கிரேட்டர் திம்பாவதி பகுதியின் அரிய மரபணு எனக் கூறியுள்ளது.

1930 களில் வெள்ளை சிங்கங்கள் இனப் பெருக்கத்திற்காகவும் வேட்டைக்காகவும் காடுகளில் இருந்து அகற்றப்பட்டு சிறைபிடிக்கப்பட்டன. தற்போது 13 இற்கும் குறைவான வெள்ளை சிங்கங்களே அவற்றின் இயற்கையான வாழ்விடங்களில் வாழ்கின்றன. இதற்குக் காரணம் அவை தற்போதைய அறிவியலால் வேறுபட்டவை என அங்கீகரிக்கப்படாததால் சட்டத்தால் பாதுகாக்கப்படவில்லை என்பதே ஆகும். (நி-5)

# அடுத்த ஆண்டு இறுதிக்குள் 500 கோடி தடுப்பூசிகள்

## இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் என்கிறார் மோடி



(டில்லி)

கொரோனா தொற்றை எதிர் கொள்ள உலக நாடுகளுக்கு உதவும் வகையில் 500 கோடி தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதற்கு தயாராக உள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.


ஜி-20 அமைப்பின் 16 ஆவது உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், சவால்கள் இருந்தபோதும் இந்த நோய்த் தொற்று காலத்தில் விநியோகச் சங்கிலியின் நம்பிக்கைக்குரிய கூட்டாளியாக இந்தியா உள்ளது. 100 கோடி தடுப்பூசி தவணைகளை இந்தியா செலுத்தியுள்ளது.

அடுத்த ஆண்டின் இறுதிக்குள் 500 கோடி தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய இந்தியா தயாராக உள்ளது. இது எங்கள் குடிமக்களுக்கு மட்டுமன்றி உலகின் பிற பகுதிகளுக்கும் கிடைக்கும் எனத் தெரிவித்தார். (நி-5)

# பயணிகள் ரயிலில் கத்திக்குத்து

## 17 பேர் காயம்



(டோக்கியோ)

டோக்கியோவில் பயணிகள் ரயிலொன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நபர் ஒருவர் நடத்திய கத்திக்குத்து மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் காயமடைந்துள்ளதாக ஜப்பான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேநேரம் கொலை முயற்சியில் ஈடுபட்ட 24 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-5)

# ஆப்கான் அரசை அங்கீகரிக்காவிடில் உலகில் அமைதியற்ற நிலை உருவாகும்

## தலிபான்கள் எச்சரிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் தலைமையில் அமைந்துள்ள இடைக்கால அரசை உலக நாடுகள் எதுவும் முறைப்படி அங்கீகரிக்கவில்லை. சீனாவும் பாகிஸ்தானும் மட்டுமே தலிபான்களுடன் நல்லுறவைப் பேணி வருகின்றன. மேலும் தலிபான்களுடன் முறையான உறவை ஏற்படுத்துமாறு உலக நாடுகளுக்கு இந்த 2 நாடுகளும் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகின்றன.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் அரசை அங்கீகரிக்க தவறுவது பிராந்தியத்தில் அமைதியற்ற நிலையை ஏற்படுத்துவதுடன் உலகுக்கும் பிரச்சினைகளை உருவாக்கி விடும் என்று தலிபான்கள் அமெரிக்காவை எச்சரித்துள்ளனர். (நி)

# வவுனியாவில் கடும் மழை

## உடைப்பெடுக்கும் நிலையில் நொச்சிக்குளம்

(குருமன்காடு)

**வவுனியாவில் பெய்த கடும் மழை காரணமாக நொச்சிக்குளம் உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளது. இதனையடுத்து உடைப்பை தடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வருவதுடன், தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி வருகின்றது.

மழை காரணமாக வவுனியா, ஓமந்தை நொச்சிக்குளத்தின் நீர் வரத்து அதிகரித்த நிலையில் குளத்தின் கட்டு கீழ் இறங்கி உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளது.

இதனையடுத்து மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மற்றும் பிரதேச செயலக, மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், நகர சபையின் தீயணைப்புப் பிரிவு, என்பன இணைந்து குளக் கட்டில் மண் பைகளை இட்டு குளம் உடைப்பெடுக்காமல் தடுக்கும் நடவடிக்கையை முன்னெடுத்தனர். இக்குளம் உடைப்பெடுத்தால் அதன் கீழ் உள்ள 98 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் அழிவடைவதுடன், பல குடிமனைகளும் நீரில் மூழ்கும் அபாய நிலை ஏற்படும். (4-5-250)

# கட்டாக்காலிகளால் அதிகரிக்கும் வீதி விபத்துக்கள்

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதிகளில் இரவு-பகலாக நடமாடும் கட்டாக்காலி கால்நடைகளால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு நகரம் மற்றும் இரணைப்பாலை வீதி முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் வீதி, பரந்தன் முல்லைத்தீவு வீதி ஆகியவற்றில் தினமும் இரவு-பகலாக கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுகிறது.

இதனால் இரவு வேளைகளில் பயணிக்கும் வாகனங்கள் விபத்துக்குள்ளாவதுடன் பலர் காயமடைந்தும் உள்ளனர். இவ்வாறு கால்நடைகளால் ஏற்படும் விபத்து காரணமாக பல உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன.

எனவே இவ்வாறு காணப்படுகின்ற கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)

# வான் பாயும் கனகாம்பிகைக்குளம்

## பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரிக்கை





(அக்கராயன்)

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் வான் பாயத் தொடங்கி உள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் மேட்டுப் பயிர்ச் செய்கைக்குரிய குளமாக கனகாம்பிகைக்குளம் காணப்படுகிறது.

இக்குளம் வான் பாய்வதனால் குளத்தில் இருந்து கிளிநொச்சி நகர் வரையான தாழ் நிலப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் தற்பாதுகாப்புடன் இருக்குமாறு கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது. குறிப்பாக சிறுவர்கள் வெள்ளம் பாய்கின்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5-350)

## வவுனியாவில்

# ஒரு வயது குழந்தை உட்பட மேலும் 36 பேருக்கு தொற்று

(நெளுக்குளம்)

வவுனியாவில் மேலும் 36 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

அதில் ஒரு வயது குழந்தை உட்பட 36 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தொற்றாளர்களை தனிமைப்படுத்துவதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை இனங்கண்டு அவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (4-5-299)

# மேய்ச்சல் தரவைகள் இன்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிப்பு


(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காலபோக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கால்நடை உரிமையாளர்கள் தமது கால்நடைகளை மேய்ச்சலுக்காக தினமும் பல மைல் தூரம் செல்ல வேண்டியுள்ளதாக தெரிவித்தனர்.

கடந்த வருடம் மழை காரணமாக பல கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டதுடன் இதுவரை இழப்பீடுகள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர். தற்பொழுது பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் கால்நடைகள் மேய்ச்சல் இன்றி மிகவும் சிரமப்படுவதாகவும் அதன் காரணமாக தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். இது தொடர்பாக வட்டக்கச்சி பகுதியில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுத்தும் எந்தப் பயனும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கால்நடை உரிமையாளரின் நலன் காக்கும் வகையில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரவையை ஒதுக்கித் தரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-316)

# வவு.தமிழ் பிரதேச சபைக்கு புதிய செயலாளர் நியமனம்



(நெளுக்குளம்)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயலாளராக கடமையாற்றிய திருமதி சுகந்தி கிசோர் அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்றார்.

இந்நிலையில் புதிய செயலாளராக முகாமைத்துவ உத்தியோகத்தர் தெர்ஜனாசுகுமார் நியமிக்கப்பட்டுள்ளதுடன், நேற்று உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளரால் குறித்த நியமனம் வழங்கி வைக்கப்பட்டது. (4-5-299)

# மன்னாரில் கடந்த மாதம் 273 தொற்றாளர்கள் அடையாளம்

## மன்.சுகாதார பணிப்பாளர் தகவல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை 273 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இவ்வருடம் மாத்திரம் 2376 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேலும் புதிதாக 15 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை 273 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் தற்போது வரை 23 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் 2376 கொரோனாத் தொற்றாளர்களும் மாவட்டத்தில் மொத்தமாக 2393 கொரோனாத் தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டனர்.

கடந்த மாதம் 431 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் மேலும் தெரிவித்தார். (4-5-285)


# இடமாற்றம் தொடர்பில் அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள்

(கொழும்பு)

கொவிட் பரவல் காரணமாக கல்வி அமைச்சின் இடமாற்ற பிரிவுக்கு ஆசிரியர்களை அழைக்கும் செயற்பாட்டை இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்தது. ஆயினும் தேசிய பாடசாலைகளின் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, 011 278 4434, 011 278 5141 அல்லது 011 278 5150 என்ற இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்தி தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (நி-5)

## புகையிரதங்கள் மோதி விபத்து



(கொழும்பு)

ராகம மற்றும் பேரலந்த புகையிரத நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இரண்டு புகையிரதங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

பாரிய அளவில் எந்தவொரு பாதிப்பும் இடம்பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



விரதங்கள்

## செல்வம் தரும் லட்சுமி குபேர வழிபாடு



திருப்பதி ஏழுமலையான் திருமணத்துக்கு கடன் கொடுத்தவர் குபேரன் என்று புராணங்கள் கூறுகின்றன. சிவபெருமான், குபேரன் மீது கருணை கொண்டு, வடக்கு திசைக்கு அதிபதியாக்கி, சங்கநிதி, பத்ம நிதியை காக்கும் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்தார்.

இதனால் 'வாழப்பிறந்தவனுக்கு வடக்கு' என்ற பழமொழி உருவானது. குபேரன் நீங்காத செல்வத்தை அள்ளித் தருபவர். ஆனால் செல்வத்துக்கு கடவுள் மகாலட்சுமி.

செல்வத்தை பக்தர்களுக்கு முறையாக பகிர்ந்து அளிக்க அவர் பணித்தார். எனவே தான் குபேரன் 'லட்சுமி குபேரன்' என்று அழைக்கப்படுகிறார்.

குபேரனுக்கு ஏற்பட்ட சாபத்தினால் நாடு, நகரம், பொன், பொருள் அனைத்தையும் இழந்து நின்ற போது, லட்சுமி தேவியை வணங்கினார். அவரிடம் இருந்து எந்திரத்தை பெற்றார். அந்த எந்திரத்தை பயன்படுத்தி எளிய பூஜையை செய்தால் நல்லது கிடைக்கும். பொன், பொருள், செல்வம் நிறையும். வியாபாரம், தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

**பிரம்மாவின் பேரன்**

படைப்புக் கடவுளான பிரம்மாவின் மகன் புலஸ்தியருக்கு பிறந்தவர் விஸ்வரஸ். இவருக்கு இரண்டு மனைவிகள். விஸ்வரசனின் 2 ஆவது மனைவி, கமாலி என்ற அரக்கனின் மகள் கேகசி. இவருக்கு பிறந்த குழந்தைகள் ராவணன், கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பனகை.

குபேரன் இலங்கைக்கு அதிபராக இருந்து ஆட்சி செலுத்தி வந்தான். இது ராவணனுக்கு பிடிக்கவில்லை. குபேரனை போருக்கு அழைத்தான். அதில் தோல்வி அடைந்த அவன் சிவபெருமானை வேண்டி தவம் இருந்து வரம் பெற்றான். பின்னர் குபேரனை வீழ்த்தி இலங்கைக்கு மன்னர் ஆனான்.

குபேரன் தன் செல்வத்தை இழந்தான். மன அமைதி வேண்டி சிவபெருமானை நினைத்து தவம் இருந்தான். சிவபெருமான் அன்னை பார்வதி தேவியுடன் அவனுக்கு காட்சி அளித்தார். தேவியின் பேரழகில் மதி மயங்கி அவரையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

(கொழும்பு)

நாட்டில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக தெதுரு ஓயா, ராஜாங்கனை மற்றும் அங்கமுவ ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

குறித்த நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு அதிகரித்துள்ளமையால் இவ்வாறு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. (நி-5)

## நவம்பர் 5 முதல் நெடுந்தூர ரயில் சேவைகள்

(கொழும்பு)

சமிக்ஞை அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பல அலுவலக ரயில்கள் சேவையில் நேற்று தாமதம் ஏற்பட்டது. மாகாணங்களுக்கு இடையிலான ரயில்கள் சேவைகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் நெடுந்தூர ரயில்கள் நவம்பர் 5 ஆம் திகதி முதல் இயக்கப்படும். நேற்று முதல் 152 அலுவலக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (நி-5)

## தொடரும் சீரற்ற காலநிலை இரு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக இரண்டு மாவட்டங்களில் உள்ள சில பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை. விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் இவ் எச்சரிக்கையினை விடுத்துள்ளது.

அதன்படி பதுளை மாவட்டத்தில் பசறை மற்றும் கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 170 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 140 | 140 |
| தக்காளி | 250 | 330 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 40 |
| கோவா | 140 | 140 | 150 | 180 |
| கரட் | 140 | 220 | 200 | 240 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 |
| புடோல் | 230 | 190 | 140 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 150-240 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 160-200 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 330 | 320 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 350 | 320 | 250 | 320 |
| லீக்ஸ் | 250 | 240 | 230 | 240 |
| பீற்றூட் | 100 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 350 | 280 | 350 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 280 |
| போஞ்சி | 300 | 250 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 80 | 80 |
| தேசிக்காய் | 450 | 450 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 280 |
| வெங்காயப்பூ | -- | 300 | -- | 320 |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 100 | 30 | 20 |
| ஈரப்பலா | -- | -- | -- | 120 |

## உரத் தட்டுப்பாடு காரணமாக

# பயிர்ச் செய்கைகளில் இருந்து விலகும் விவசாயிகள்

### விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவிப்பு



(கொழும்பு)

உரத் தட்டுப்பாடு காரணமாக, ஒட்டுமொத்த நாட்டிலும் மரக்கறிகள் உள்ளிட்ட பிற பயிர்ச் செய்கையில் இருந்து விவசாயிகள் விலகிச் செல்வதாக விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பொருளாதார மையங்களுக்கு மரக்கறி வரத்து குறைந்துள்ளதால் மரக்கறிகளின் விலை 100 சதவீதம் உயர்ந்துள்ளது.

முன்னதாக, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு 2.5 மில்லியன் கிலோ மரக்கறிகள் கிடைத்திருந்த நிலையில், தற்போது மரக்கறிகளின் இருப்பு 300,000 கிலோவாக குறைந்துள்ளது.

அடுத்த இரண்டு மாதங்களில் மழை அதிகரிப்பால் காய்கறிகளின் விலை மேலும் உயரும் என்றும் காய்கறி மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர். (நி-5)

# பிரான்ஸிலிருந்து 200 பயணிகளுடன் இலங்கை வந்துள்ள விமானம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான விமானமொன்று பிரான்ஸிலிருந்து நேற்று அதிகாலை இலங்கை வந்துள்ளது.

ஆறு ஆண்டு இடைவெளியின் பின்னர் இலங்கைக்கும், பிரான்ஸிற்கும் இடையில் நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் சுமார் 200 பயணிகளுடன் நேற்று குறித்த விமானம் வந்துள்ளது.

வாரத்திற்கு மூன்று நாட்கள் இரு நாடுகளுக்கும் இடையில் நேரடி விமான சேவை முன்னெடுக்கப்படும்.

புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் இவ்வாறு இரு நாடுகளுக்கும் இடையில் நேரடி விமான சேவை மேற்கொள்ளப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பொறுப்பற்ற நடவடிக்கைகளால் நாட்டிற்கு பாரிய சிக்கல் ஏற்படும்



(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் பின்னர் அதிகளவான மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக தங்களது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதை கொண்டாடும் மக்களும் உள்ளனர். அம்பிலிபிட்டிய சந்திரகா குளத்திற்கு அருகில் அதிகளவான மக்கள் வேடிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அவர்களில் பெரும்பாலானோர் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டதாக தகவல்கள் வெளியாகின.

மக்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டால் எதிர்காலத்தில் நாட்டிற்கு பாரிய சிக்கல் ஏற்படலாம் என சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் உபுல் ரோஹண தெரிவித்தார். (நி-5)

# வாகன விலைகளில் தளர்வு

(கொழும்பு)

அதிகரித்திருந்த வாகனங்களின் விலைகள் தற்போது ஓரளவு குறைவடைந்து வருகிறது என வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரஞ்ஜிகே தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் பின்னர், வாகனங்களின் விலைகளில் மாற்றம் ஏற்படலாமெனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை, வாகன உதிரிப்பாகங்களின் விலைகள் அதிகரித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (நி-5)

## இன்று ஒரு தகவல்

# வெட்டிப்பேச்சு

காரைக்குடியிலிருந்து சென்னைக்கு நான் பஸ்ஸில் பயணமானேன். பக்கத்து சீட் காலி. உடலைக் குறுக்கிக்கொண்டு ஓரளவுக்கு சௌகரியத்துடன் படுத்தேன். புதுக்கோட்டையில் ஒரு கட்டையான குரல் என் தூக்கத்திற்கு எதிரியாக. அந்த இடத்தில் வந்து உட்கார்ந்த ஒருத்தர். எரிச்சல் ஏற்பட்டாலும் அவர் ஒரு வைத்தியர் என்பதை அறிந்ததும் சுவாரஸ்சியம் பொங்கிற்று.

அவரே பேச்சுக் கொடுத்து என்னைப்பற்றித் தெரிந்து கொண்டார். அவருக்கு தொழுநோய்த் தடுப்பு சம்பந்தப்பட்ட அமைப்பில் ஏதோ ஓர் உயர்ந்த பதவி. தொழுநோய் சம்பந்தமாக நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சுவாரஸ்சியமாக பதில் சொன்னார். நேரம் போனதே தெரியவில்லை. மிகவும் பயனுள்ள பேச்சு. திருச்சியை எட்டிய சிறிது நேரத்திற்கெல்லாம் உறங்கிப்போனோம்.

நான் பொதுவாகச் சக பயணிகளுடன் பேச்சுக் கொடுப்பதில்லை.நாம் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் பயனுள்ளதாக – நம் திறமையை, பொது அறிவை வளர்த்துக் கொள்ளும் விதத்தில் அமைய வேண்டும் என்று விரும்புகின்றவன் நான்.

நாம் ஒரு வார்த்தை பேச 72 தசைகள் இயங்க வேண்டியிருக்கிறது. பேசுவதனால் உணவால் பெறப்படும் கலோரிச்சத்துக்கள் கணிசமாக வீணாகின்றன. உடலுக்கு இவ்வளவு சிரமத்தை கொடுக்கும் பேச்சு பயனுள்ளதாக அமைய வேண்டாமா?

சில வீடுகளில் கணவன் வேலைக்குப் போனதும் பெண்களாக ஒன்று சேர்ந்து அரட்டை அடிக்க ஆரம்பித்து விடுவார்கள். ஏதாவது பயனுள்ள பேச்சாக இருக்கும் என்கிறீர்களா? அதுதான் இல்லை. அநாவசியமான ஊர்க்கதையாக இருக்கும். அல்லது அந்த இடத்தில் இல்லாத ஒரு பெண்ணைப் பற்றிய கேலியும் கிண்டலுமாக இருக்கும். நாளைக்கு, தான் அந்த இடத்தில் இல்லை என்றால் தன் தலை உருளும் என்பதை இவர்கள் ஏனோ எண்ணிப் பார்ப்பதில்லை.

சில அலுவலகங்களிலும் சில கல்லூரிகளிலும் கூட வெட்டிப்பேச்சுப்பேசுவதற்கென்று பெரும் கூட்டம் சேருகின்றது. உபயோகம் இல்லாத– சம்பந்தா, சம்பந்தமில்லாத விடயங்களைப் பற்றி சீரியஸாக விவாதிக்கிறார்கள்.


வெட்டிப்பேச்சுக்களினால் மனவருத்தம் ஏற்படுகிறது, நேரம் வீணாகிறது, கெட்ட பெயர் ஏற்படுகிறது, மனம் கெடுகிறது, உடல் நலம் கெடுகிறது.

ஒருவருடன் அல்லது பலருடன் பேசி முடித்த பின், என்ன பேசினோம், நாட்டு நடப்பைத் தெரிந்து கொண்டோமா, வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய விடயங்களைத் தெரிந்து கொண்டோமா, மலிவானதும் தரமானதுமான பொருட்கள் எங்கே கிடைக்கின்றன என்பன போன்ற உபயோக விடயங்களை அறிந்து கொண்டோமா என்றெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தப் பட்டியலில் அடங்காத பேச்சாக இருந்தால் அது வெட்டிப் பேச்சு; வீண் பேச்சு.

வேலை தேட முயற்சி செய்யாமல் சுற்றித் திரிபவர்கள், பொறுப்பற்றவர்கள், சோம்பேறிகள் ஆகிய இவர்களுக்கே உரியவை வெட்டிப் பேச்சுக்கள்.

நாம் அந்தப் பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்கக் கூடாது.

**லேனா தமிழ்வாணன்**




## ஓநாயும் முயலும்



"உதவி கேட்டு குரல் கேட்டது. அப்போது ஓநாய் தரையில் கிடக்க, அதன் மேல் பெரிய பாறை விழுந்து, அழுத்திக் கொண்டிருந்தது..."

முயல், திக்கி திணறி விபரிப்பதைக் கேட்க, பொறுமை இல்லாத ஓநாய், "இந்தா வாத்தம்மா! உன் வக்கணையெல்லாம் வேண்டாம். சட்டுப்புட்டுன்னு தீர்ப்பைக்கூறு. இல்லாட்டி, உன்னையும் விழுங்கி ஏப்பம்விட்டுடு வேன்..." என சிடுசிடுத்தது.

ஓநாயின் பேச்சை லட்சியம் செய்யாத வாத்து, "இவ்வளவு பெரிய பாறையா... இதை, நீ புரட்டி, ஓநாயைக் காப்பாத்தினாயா... என்ன கதை இது! நான் நம்ப மாட்டேன்.

உன்னாலேஇவ்வளவு பளுவான பாறையை நகர்த்தி இருக்கவே முடியாது. நகர்த்தியிருந்தால், என்கண்ணாலே பார்த்தால் தான், நம்புவேன்..." என்று கறாராக கூறியது.

ஓநாய்க்கு மகிழ்ச்சி. "முயலின்பேச்சை வாத்து நம்பவில்லை" என எண்ணியது. எனவே வாத்தின் பேச்சுக்கு மறுப்புச் சொல்லாத ஓநாய், மறுபடியும் அந்த பாறை அருகே படுத்தது.

"எங்கே... இப்போ அந்த கல்லைப் புரட்டி, ஓநாய் மாமாவின் முதுகின் மீது நகர்த்து பார்க்கலாம் உன்னால் செய்ய முடிந்தால், உதவியதை நம்புகிறேன்..."என்றது வாத்து.

முயலைசுவைத்து சாப்பிட கற்பனை செய்தபடி, கண் மூடி படுத்துக் கிடந்தது ஓநாய். உயிர் ஆசை உந்தி தள்ள, பலத்தை எல்லாம் திரட்டி, பாறையைப் புரட்டி, ஓநாயின் மீது ஏற்றியது, கெட்டிக்காரகுட்டி முயல்

"அப்பாடா... வேலை முடிந்தது..." என பெருமூச்சு விட்டது. பாறை அழுத்த மூச்சு விட முடியாமல் திணறிய ஓநாய், "என்னது... மறுபடியும் பாறை என் மீதா... அதை உருட்டி அப்பால் தள்ளு முயலே..." எனக் கெஞ்சியது.

மிக நிதானமாக, "அவசரப்படாதே ஓநாய் மாமா... உன் நிலை கண்டு இரக்கப்பட்டு, உதவிய முயலைக் கொன்று தின்ன ஆசைப் பட்டாயே... அது அநியாயம். இனி இப்படியே கிட... யாராவது உதவிக்கு வந்தால், அவர்களிடமும் உன் நன்றி கெட்ட தனத்தைக் காட்டாதே..." என்றது.

வாத்தின் சமயோசித உதவியால் நெகிழ்ந்த குட்டி முயல், "நன்றி..." என்று கண்ணீர் மல்கியது.

"தம்பி... இரக்கத்துடன் உதவி செய்வது நல்ல பண்பு தான். ஆனால் யாருக்கு உதவலாம் என யோசித்து செயற்பட வேண்டும் தெரிந்ததா. ஓடு ஓடு" என விரட்டியது வாத்து.

"தப்பினேன்... பிழைத்தேன்" என, தாவி குதித்து ஓடியது குட்டி முயல். பரிதாபமாக ஓல மிட்டது ஓநாய் நீரைக் கிழித்தபடி எதிர்க்கரை நோக்கி நீந்தியது வாத்து.

சிறுவர்களே எப்போதும் சமயோசிதமாக செயற்பட பழகுங்கள்.

(முற்றும்)

# மகாபாரதம்




மனிதர்கள் உணவுக்காகப் பறவைகளைக் கொல்கின்றனர். இது தவிர வேறு நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. துக்கம் பிறப்பானாலும் இறப்பானாலும் உண்டாகிறது என வேதங்கள் கூறுகின்றன.

எல்லோருக்கும் உயிரின் மீது ஆசை உண்டு. அதுபோலவே மனைவி, மக்கள் சுற்றத்தார் ஆகியோரிடமும் ஆசை ஏற்படுகிறது. முதுமை ஒரு துக்கம். பொருள் இழப்பு ஒரு துக்கம். வேண்டாத இடத்தில் இருப்பது ஒரு துக்கம்.

இதுபோலவே வைராக்கியத்தால் ஏற்படும் துக்கமும், பெண்களால் ஏற்படும் துக்கமும் உண்டு. இறந்த மகனால் உண்டாகும் துக்கத்தை மறக்கவே முடியாது.

பிறருக்கு ஏற்படும் துக்கத்தை கண்டு நாமும் துக்கப்படுகிறோம். மன்னா நீ எனக்கு இழைத்த கொடுமையும் நான் உனக்கு செய்த துன்பமும் நெடுநாள் ஆன பிறகும் அழியா.

வைராக்கியம் ஏற்பட்ட பின் நெருங்கி வாழ நினைப்பது உடைந்த மட்கலம் ஒன்றாவது போல ஆகும்"

பகைவர் வார்த்தைகளில் நம்பிக்கை கொள்வோர் புற்களால் மூடப்பட்ட குழியில் வீழ்ந்து துன்புறுவது போல் துன்புறுவர்.

ஒருவனுக்கும் கெடுதி செய்யாது இருக்க வேண்டும். கெடுதி செய்த பின் நம்பிக்கை கொள்ளக் கூடாது. நம்பினால் அழிவு நிச்சயம்" என்றது பூஜனி.

பிரமதத்தன் "நம்பிக்கையின்றி உலகில் ஒன்றும் சாதிக்க முடியாது. எந்தச் செயலையும் செய்ய இயலாது. பொருளையும் சேர்க்க முடியாது.

ஒருவன் எப்போதும் ஒருவிதமான சந்தேகத்தோடும் பயத்தோடும் இருந்தால் அவனை உயிர் வாழ்பவனாகவே கருத முடியாது. அவனை செத்தவனாகவே உலகம் கருதும். எனவே என்னிடம் நம்பிக்கை யோடு வந்திரு" என்றான்.

ஆயினும் பூஜனியின் மனம் மாறவில்லை. "மன்னா... புண்பட்ட காலுக்கு என்னதான் பாதுகாப்பான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு ஓடினாலும் கூட அக்காலுக்கு வலி உண்டாகும்.

துன்பம் உள்ள கண்ணால் காற்றை எதிர்த்துப் பார்த்தால் துன்பம் அதிகமாகும். ஒருவன் அறிவு கெட்டு தீய வழியில் சென்றால் அழிவு நிச்சயம்.

தெய்வமும், முயற்சியும் ஆகிய இரண்டில் ஒருவனுக்கு உதவுவது முயற்சியே! இயல்பாக முயற்சி இல்லாதவன் வாழ்க்கையில் தோல்வியையே சந்திப்பான்.

கல்வி, தூய்மை, திறமை, ஆளுமை, வைராக்கியம் ஆகிய ஐந்தும் ஒரு சேரக் கருதத்தக்கன. மனிதனுடைய சொத்துகள் முயற்சியால் வருபவை.

முயற்சியுடையவன் இவற்றைப் பெற்று இன்பத்தை அனுபவிக்கிறான். பிறரைக் கண்டு அவன் பயப்பட மாட்டான். அறிவுடையவன் செல்வம் நாளா வட்டத்தில் பெருகும்.

சிலர் தம் மனைவி, பிள்ளைகள், உறவினர் ஆகியோரிடத்து மிகுந்த பாசம் கொண்டு துன்புறுவர். (தொடரும்)

உயர்ந்த லட்சியம்தான் மனிதரின் செயல்களுக்குச் சிறப்பைத் தருகிறது. ஆனால் ஊக்கமின்மை அவ்வுயர் லட்சியத்திற்கு உலை வைக்கிறது.
- லா புரூயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர்கள் எவரும் பங்கேற்கக்கூடாது!

ஒரே நாடு – ஒரே சட்டம் என்ற தொனிப் பொருளோடு அரசியலமைப்பைத் தயாரிக்கின்ற ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

ஞானசார தேரர் தலைமையில் அமைக்கப்பட்ட மேற்படி ஜனாதிபதி செயலணியில் தமிழர்கள் எவருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை.

தவிர, செயலணியின் தலைவர் ஞானசார தேரர் உட்பட ஒன்பது பேர் சிங்களப் பிரதிநிதிகளாகவும் நான்கு பேர் முஸ்லிம். பிரதிநிதிகளாகவும் மொத்தம் 13 பேரைக் கொண்ட ஜனாதிபதி செயலணியில் தமிழர்கள் எவரும் இடம்பெறவில்லை என்பது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிந்ததே.

அப்படியானால், தமிழர்கள் மீது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடும் கோபத்திலும் வெறுப்பிலும் இருக்கிறார் என்று அனுமானிக்க முடியும்.

இது ஒருபுறமிருக்க, ஜனாதிபதி செயலணியில் தமிழர்கள் எவரையும் இணைக்காமல் தவிர்க்கும்போது அது தொடர்பில் எதிர்ப்பு ஏற்பட, சில வெளிநாட்டுத் தூதுவர்கள் இது விடயத்தில் தலையிட்டு தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கும் இடம்கொடுங்கள் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுவர்.

அவர்களின் கோரிக்கையை பரிசீலித்த ஜனாதிபதி, தன்னை ஒரு நடுநிலையாளராகக் காட்டிக் கொள்ளும் பொருட்டு தமிழ்ப் பிரதிநிதி ஒருவரை செயலணியில் சேர்த்துக் கொள்வார்.

இவை நடந்தாக, இலங்கை ஆட்சியாளர்களிடம் எடுத்துக் கூறினால் அவர்கள் உடன் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதான ஒரு மாயைத் தோற்றம் உருவாக்கப்படும் என்பது தான் இதன் பின்னணியில் இருக்கக்கூடிய முக்கிய விடயம்.

பரவாயில்லை எந்தளவுக்கு தமிழர்களை ஓரங்கட்டுகின்றார்களோ அந்தளவுக்கு அதன் எதிர்விளைவு அமையும் என்பதை மட்டும் கூறிக் கொள்ளலாம்.

.தவிர, ஒரே நாடு – ஒரே சட்டம் என்பதான அரசியலமைப்பைத் தயாரிக்கின்ற ஜனாதிபதி செயலணியில் ஞானசார தேரர் இருந்தால், தன்னால் தொடர்ந்தும் நீதியமைச்சராக இருக்க முடியாது என்று அமைச்சர் அலி சப்ரி கூறியமை ஜனாதிபதி கோட்டாவுக்கு பெருத்த அவமானத்தையும் தலைகுனிவையும் ஏற்படுத்திவிட்டது.

அதாவது குறித்த ஜனாதிபதி செயலணியில் முஸ்லிம் பிரதிநிதிகளாக நான்கு பேருக்குச் சந்தர்ப்பம் கொடுத்து மேற்குறித்த அரசியலமைப்புக்கு சிறுபான்மை இனமாகிய முஸ்லிம்களின் ஒத்துழைப்பை பெற்று, தமிழர்களுக்கு டோஸ் கொடுக்க நினைத்த ஜனாதிபதி கோட்டாவுக்கு அலி சப்ரி என்ற முஸ்லிம் அமைச்சர் உள்ளித்தைலம் வைத்துவிட்டார்.

ஆம், ஞானசார தேரர் செயலணியில் இருந்தால் எனது நீதி அமைச்சர் பதவியைத் தூக்கி எறிவேன் என்று சப்ரி கூறியமை ஜனாதிபதியைப் பொறுத்தவரை சாதாரண மானவிடயமல்ல.

இந்த நிலையில் ஜனாதிபதி செயலணியில் தமிழர்களுக்கும் இடம் வழங்க வேண்டும் என்ற கருத்தை ஜனாதிபதியும் ஞானசாரரும் முன்மொழியத் தொடங்கியுள்ளனர்.

இங்குதான் குறித்த ஜனாதிபதி செயலணியில் தமிழர்கள் எவரும் பங்கேற்பதில்லை என்ற தீர்மானத்தை எடுத்து, எம் இனத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பது ஒட்டுமொத்தத் தமிழர்களதும் தலையாய கடமையாகும்.

# மன்னாருக்கு இந்து அரச அதிபரை சுமந்திரனால் நியமிக்க முடியுமா?

## ஞானசார தேரர் கேள்வி

(கொழும்பு)

மன்னார் அரசாங்க அதிபராக ஒரு இந்துவை நியமிக்க எம்.ஏ.சுமந்திரனால் முடியுமா? என கலகொட அத்தே ஞானசார தேரர் கேள்வியெழுப்பியுள்ளார்.

சமூக வலைத்தளங்களில் வைரலாகி வரும் ஞானசாரரின் வீடியோ ஒன்றிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவர் பதவி எனக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஏனைய இனத்தவர்கள் யாரும் கவலைப்பட வேண்டாம்.

மன்னாரில் இந்து ஒருவரை அரசாங்க அதிபராக நியமிக்க சுமந்திரனால் முடியுமா? முடியாது. இரா.சம்பந்தனின் வீட்டில் புத்தர் சிலை உள்ளது. அவர் காலையும் மாலையும் அதை வணங்குகிறார். சுமந்திரன் ஒரு மதவாதி. அவர் அரசியல் வியாபாரம் செய்கிறார் என்றார். (ம-3)

# அரசாங்கத்தில் இருக்கும் சிலர் ஜனாதிபதி, பிரதமர் ஆடைகளை அணிய விரும்புகின்றனர் - பெரமுன

(கொழும்பு)

அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு சிலர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆடைகளை அணிய விரும்புகின்றனர் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இரவில் சாதாரண சாரங்களை அணியாமல் தேசிய ஆடைகளை அணிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சு நோய் ஏற்படுவது இயல்பு. அதே போன்று அமைச்சராக இருப்பவர் ஒருவருக்கு ஜனாதிபதி அல்லது பிரதமர் நோய் ஏற்படுவதுண்டு.

இதன்போது சிலர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆடைகளை அணிய ஆசைப்படுகின்றனர். சிலர் அந்த ஆடைகள் அணிவிக்கப்படுகின்றனர். (ம-3)

# வவுனியாவில் ஆசிரியருக்கு கொரோனாத் தொற்று

(வவுனியா)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்ப பிரிவுக்கு கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம-3,250)

# திறன் வகுப்பறை திறப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் கனிஷ்ட வித்தியாலயத்தின் திறன் வகுப்பறைத் திறப்பு, நிதி அன்பளிப்பு, இலத்திரனியல் உபகரணங்கள் அன்பளிப்பு, பேருந்து நிழற்குடை திறப்பு நிகழ்வு என்பன இன்று 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் பேராசிரியர் கா.குணபாலன் தலைமையில் நடைபெறவுள்ள து.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன் கலந்துகொள்வார். (ம-3)

# கோப்பாய் பொலிஸ் பிரிவில் கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொக்கணை பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம் பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியை பொலிஸார் நேற்று முற்றுகையிட்டனர்.

அப்பகுதியில் இருந்து கோடா, 20 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்கள் என்பவற்றுடன் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-3,104)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

யாழ். பிரதேசத்தில் சுருவில், ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."
-வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## தெய்வநிலைக்கு உயருங்கள்

❖ மற்றவர்களுக்கு நன்மை ஏற்படுமானால் நரகத்திற்குக் கூட செல் வதற்குத் தயாராய் இருங்கள். மரணம் வருவது உறுதியாக இருக்கும்போது ஒரு நல்ல காரியத்திற்காக உயிரை விடுவது மேல்.

❖ உலகில் நல்லவர்கள் பெரிய தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் முழுவதும் அனுபவிக்கிறது.

❖ உலகவாழ்வில் இருந்து தப்பி ஓட முயற்சி செய்ய வேண்டாம். வெற்றியோ தோல்வியோ போராடுங்கள்.

❖ பாமரன் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவன் தெய்வமாகவும் உயரவேண்டும். இதுவே ஆன்மிகத்தின் பயன்.

❖ தெய்வீகத்தன்மை இல்லாமல் பெறும் மிதமிஞ்சிய அறிவும், ஆற்றலும் மனிதர்களை மிருகங்களாக்கி கீழ்நிலைக்குத் தள்ளிவிடும்.

❖ சுயநலம், சுயநலமின்மை இந்த இரண்டையும் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் வேறு எந்தவிதமான வேறுபாடும் கிடையாது.

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I


06

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



இது 0.523 மீற்றர் கொண்டது. இந்த அலகுகளில் எகிப்தியர்கள் முன்னோடிகளாக இருந்தபோதிலும், முழங்கை மற்ற இடங்களில் ஒரு அளவீட்டு முறையாகவும் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும், ஒவ்வொரு முழத்தின் அளவீடு பிராந்தியத்திற்கு ஏற்ப மாறுபடும். ஏனெனில் ஒரு முதிர்ந்த மனிதரின் முழங்கை அளவே ஒரு முழமாகக் கருதப்பட்டது. முழங்கை என்பது அம் மனிதரின் கை முட்டியிலிருந்து நடுவிரலின் நுனி வரை உள்ள நீளஅளவு ஆகும். உதாரணமாக, பாரசீக பேரரசின் முழம் 0.500 மீற்றர், கிரேக்க முழம் 0.463 மீற்றர். பொதுவாக முழம் 0.457 மீற்றராக (18 அங்குலம்) எடுக்கப்படும். சில பண்டைய கலாச்சாரத்தில் இது 0.531 மீற்றராக (21 அங்குலமாக) கருதப்பட்டது.

**பண்டைய காலத்தில் முழம் என்பது நாட்டுக்கு நாடு வெவ்வேறு நீளமாக இருந்தது. பொதுவாக முழம் 0.457 மீற்றராக (18 அங்குலம்) எடுக்கப்பட்ட போதும் பாரசீக பேரரசின் முழம் 0.500 மீற்றர் எனவும், கிரேக்க முழம் 0.463 மீற்றர் எனவும் கருதப்பட்டன. சில பண்டைய கலாச்சாரத்தில் இது 0.531 மீற்றராக (21 அங்குலமாக) கருதப்பட்டது.**




### சிற்பக்கலையின் கோயில் கட்டுமான (முழ) அளவுகோல்கள்

சிற்பக்கலையில் கோயில்கள் கட்டுவதற்கென்று சில முழக்கோல் அளவுமுறைகள் தமிழ்நாட்டில் வழங்கப்பெற்று வந்துள்ளன. கிஷ்கு முழக்கோல் என்ற அளவுகோல் இதனை தஞ்சை முழக்கோல் என்றும் அண்ணாமலை முழக்கோல் என்றும் அழைப்பர். இந்த முழக்கோல் அளவுமுறைக் கொண்டு அங்குள்ள பெரியகோயிலும், அண்ணாமலைக் கோயிலும் நிர்மானிக்கப்பட்டுள்ளன. இதுபோல தில்லை முழக்கோல் என்பது பிராஜாபத்திய முழக்கோல், மதுரை முழக்கோல் என்பது அதம கிஷ்கு முழக்கோல். தில்லை ஆடாவல்லான் மற்றும் மதுரை மீனாட்சி கோயில்கள் இம் முழக்கோல்களால் அளவீடு செய்யப்பட்டு கட்டப்பட்டவை.

**சிற்பக்கலையில் கோயில்கள் கட்டுவதற்கென்று சில முழக்கோல் அளவுமுறைகள் தமிழ்நாட்டில் வழங்கப்பெற்று வந்துள்ளன. கிஷ்கு முழக்கோல் என்ற அளவுகோல் இதனை தஞ்சை முழக்கோல் என்றும் அண்ணாமலை முழக்கோல் என்றும் அழைப்பர். இந்த முழக்கோல் அளவு முறைக் கொண்டு அங்குள்ள தஞ்சைப் பெரியகோயிலும், அண்ணாமலைக்கோயிலும் நிர்மானிக்கப்பட்டுள்ளன.**

தமிழகத்தின் அதிகமான கோயில்கள் தஞ்சை, தில்லை மற்றும் மதுரை முழக்கோல் கொண்டு நிர்மானிக்கப்பட்டவை. பழனிக் கோயில் கட்ட மதுரை முழக்கோலான அதம கிஷ்கு முழக்கோல் பயன்படுத்தப்பட்டுள்ளது. கோயில்கள் கட்ட பயன்படும் முழக்கோல்களில் தில்லை முழக்கோல் அளவில் பெரியது.

மதுரை முழக்கோல் அளவில் சிறியது. அதுபோல வீடு, மாளிகை, அரண்மனை, கோயில்கள் கிஷ்கு முழம், பிராஜாபத்திய முழம் கொண்டும், வண்டி, படுக்கை கிஷ்கு முழம் கொண்டும், மனையிடங்கள் தனுர்கிரஹ முழம் கொண்டும் அளவிடப்படுகின்றன. கயிறு சாலைகளை அளக்க பயன்படும்.

### சிற்ப நீட்டல் அளவை முறை வாயிபாடு

- எட்டு பரமாணு ஒரு தேர்த்துகள்
- எட்டு தேர்த்துகள் ஒரு மயிர் நுனி அகலம்
- எட்டு மயிர் நுனி அகலம் ஒரு ஈர்
- எட்டு ஈர் ஒரு பேன்
- எட்டு பேன் ஒரு நெல் (யவை) (செந்நெல்)
- எட்டு நெல் அகலம் ஒரு விரல் (அங்குலம்)

அங்குலம் மானங்குலம் என அழைக்கப்படும் (மானம் (அளவை) + அங்குலம்)

குறிப்பு- ரேணு அல்லது தேர்த்துகள் என்பது, ஒரு ரதம் செல்லும் போது எழும்பும் தூசிப்படையின் ஒரு தூசு.

### மானங்குலம் மூன்று வகை

- எட்டு நெல் அகலம் (யவை) ஒருவிரல் (அங்குலம்) என்பது உத்தமாங்குலம்.
- எழு நெல் அகலம் (யவை) ஒரு விரல் (அங்குலம்) என்பது மத்திமாங்குலம்.
- ஆறு நெல் அகலம் (யவை) ஒரு விரல்(அங்குலம்) என்பது அதமாங்குலம்.

(செந்நெல் அதன் அகலத்தைப் போல இரண்டு மடங்கு அதன் நீளம்.)

- ஆறு மானாங்குலம் ஒரு தாளம்.
- இரண்டு தாளம் ஒரு விதஸ்தி.
- இரண்டு விதஸ்தி அல்லது 24 விரல் ஒரு ஹஸ்தம் அல்லது தச்சு முழம்.

### முழக்கோல் அளவைகள்

- 24 விரல் கொண்ட முழம் என்பது கிஷ்கு
- 25 விரல் கொண்ட முழம் என்பது பிராஜாபத்தியம்
- 26 விரல் கொண்ட முழம் என்பது தனுர் முஷ்டி
- 27 விரல் கொண்ட முழம் என்பது தனுர் கிரஹம்
- 28 விரல் கொண்ட முழம் என்பது பிராச்யம்
- 29 விரல் கொண்ட முழம் என்பது வைதேகம்
- 30 விரல் கொண்ட முழம் என்பது வைபுல்யம்
- 31 விரல் கொண்ட் முழம் என்பது பிரகிர்ணம்
- 24 விரல் அளவு கொண்ட கிஷ்கு முழத்தை உத்தம கிஷ்கு முழம் என்றும்

23½ விரல் அளவு கொண்ட கிஷ்கு முழத்தை மத்திம கிஷ்கு முழம் என்றும்


- 23¼ விரல் அளவு கொண்ட கிஷ்கு முழத்தை அதம கிஷ்கு முழம் என்றும் அழைப்பர்
- 24 விரல் ஓர் கிஷ்கு முழம்.
- 4 கிஷ்கு முழம் ஒரு தனுர் தண்டம்
- 8 தண்டம் (அல்லது 32 கிஷ்கு முழம்) ஒரு ரஜ்ஜு அல்லது கயிறு

குறிப்பு-பெரும்பாலும் நெற்கள் ஐந்து வகைப்படும். அவை செந்நிறம், பொன்னிறம், வெண்ணிறம், பெருநெல், சௌகந்தி என்பவனாகும். இவ் வகை நெற்களில் செந்நெல்லே விரல் அளவு கொள்வதற்கு ஏற்றதென தென்னகத்துச் சிற்ப நூலோர்கள் தேர்ந்தனர். செந்நெல்லின் அளவை யவை என்றும், விரல் அளவை அங்குலம் என்றும் சிற்ப நூல்கள் தெரிவிக்கின்றன.

### மானாங்குலம்

அளப்பதற்கு பொதுவான அங்குலம், எட்டுநெல் (யவை) அகலம் கொண்டது. விரல் அளவு அல்லது அங்குல்ம் அளவு மானாங்குலம் என்பதாகும். (மானம் - அளவை) எட்டு நெற்களை அகலவாட்டில் ஒன்றொடொன்று நெருங்க அமைத்து அதன் மொத்த அகலம் ஒரு அங்குலமெனக் கொள்ள வேண்டும். எட்டு நெல்லைப் படுக்க வைப்பதும் 8நெல்லைக் குத்திட்டு வைப்பதும் நீளத்தில் சமம், படம்-7 ஐப் பார்க்க.

மானாங்குலம்




**எட்டு நெல்லைப் படுக்க வைப்பதும் 8 நெல்லைக் குத்திட்டு வைப்பதும் நீளத்தில் சமம் படம்-7**

சிற்பகலையில் வீடு, மாளிகை, அரண்மனை, கோயில் ஆகிய கட்டடங்களைக் கிஷ்கு முழத்தாலும், பிராஜாபத்திய முழத்தாலும் அளவிட்டுச் செய்தல் வேண்டும். வண்டிகள், படுக்கைகள் ஆகியவற்றைக் கிஷ்கு முழத்தால் அளவிடலாம். மனையிடங்களைத் தனுர் முஷ்டி முழத்தால் அளவிட வேண்டும. கிராமம், நகரம், பட்டணம் ஆகிய பெரிய நிலப்பரப்புகளைத் தனுர்கிரகக் முழத்தாலும் அளவிட வேண்டும் என்று கூறப்படுகிறது.

### அரத்னி அளவை

யாக மண்டபத்தில் நடைபெறவிக்கும் வேள்விப் பணியை தலைமை ஏற்று நடத்தும் ஆகம விற்பன்னர், அவருடைய கை முழம் யாகசாலை அமைக்கும் பணிக்கு அளவாகக் கொள்ள வேண்டும். இந்த அளவுகோல் இரண்டு வகைப்படும். ஒன்று ரத்னி, மற்றொன்று அரத்னி. முழங்கை முட்டியிலிருந்து விரிந்து நீண்ட கையின் சிறு விரல் நுனி வரை அரத்னி என்றும், விரல்களை முட்டியாக்கி முழங்கை முட்டி முதல் முதல் மடக்கிய கை முட்டி வரை கொண்ட நீளம் ரத்னி என்றும் சொல்லப்படும்.

(தொடரும்...)

## ஜனாதிபதி...

2021 ஒக்ரோபர் 31 முதல் 2021 நவம்பர் 12 வரையில் கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 2021 காலநிலை மாற்ற மாநாட்டில் (COP 26) கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஸ்கொட்லாந்து சென்றுள்ளார்.

அவரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து புலம்பெயர் ஈழத்தமிழர்கள் பல்வேறு வழிகளில் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

அந்தவகையில் நேற்று மாநாடு இடம்பெறும் வளாகத்துக்கு அண்மையில் மாபெரும் போராட்டத்தை ஈழத் தமிழர்கள் முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "ராஜபக்ஷ ஒரு போர் குற்றவாளி", "மனித உரிமைகளை மீறுபவர்", "இனப்படுகொலையாளியை கைது செய்ய வேண்டும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும்" என பல்வேறு கோசங்களை எழுப்பியிருந்தனர்.

இப்போராட்டத்தில் தமிழ் அமைப்புக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (ம-3)

## 702 இலங்கை...

வாத விசாரணைப் பிரிவு கொழும்பு நீதவான் நீதிமன்றில் நேற்று அறிவித்துள்ளது.

ஜ.எஸ் அமைப்பைச் சேர்ந்த முகமது சம்சுதீன் அண்மையில் இந்திய அரச புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

702 இலங்கையர்களுடன் அவருக்கு தொடர்பு இருப்பதாக அவரது வட்ஸ்அப் கணக்கில் தகவல் கண்டறியப்பட்டுள்ளதாக பயங்கரவாத தடுப்புப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. (ம-3)

## வயலுக்கு...

யுதம் ரவிச்சந்திரன் (வயது-36) என்ற விவசாயியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பாம்பு தீண்டி குறித்த விவசாயி உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-3,281)

## 13ஆவது...

தின் வழிவந்த மாகாண சபை ஆட்சி முறை தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளான நில ஆக்கிரமிப்புகள், நிலப் பறிப்புகள், ஈழத் தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை மாற்றியமைப்பதற்கான குடியேற்றங்கள், தமிழ்த் தேசத்தின் கட்டமைப்புகள் மீதான அழிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றில் எதையும் தீர்க்கவில்லை. தீர்க்க வலுவற்றது என்பது தமிழர் நலன்களை உண்மையாக விரும்பும் எவருக்கும் தெரிந்ததே எனவும் ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக்கை குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, 13ஆம் திருத்தமும் இதன் கீழான மாகாண சபை முறைமையும் 34 வருடங்களாக அமுலில் உள்ளது. பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைத் தவிர 13ஆம் திருத்தத்தில் கூறப்படுகின்ற அதிகாரங்கள் மாகாண சபைகளிடமிருந்து முற்றாகப் பறிக்கப்படவில்லை.

ஆனாலும் வடக்கு மாகாண சபையால் சிங்கள அரசின் இனவழிப்பு முயற்சிகளைத் தடுக்க முடியாது மட்டுமல்ல, முதலமைச்சர் நிதியமொன்றைக்கூட உருவாக்க முடியவில்லை. சிங்களப் பேரினவாதத்தைப் பாதுகாத்து வருகின்ற ஒற்றையாட்சியின் கீழ்வரும் எந்த ஒரு அரசியல் தீர்வும் தமிழர்களின் மீதான சிங்கள அரசின் இனவழிப்பைத் தடுக்கும் வலுவைக் கொண்டிருக்காது என்பதும் தெரிந்ததே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## இணைந்து...

கார தெரிவித்தார்.

கூட்டுப் பொறுப்பு என்பது ஒன்றும் கூட்டுப் பணி அல்ல என்றும், சில விடயங்களுக்குப் பழிவாங்கும் வகையில் பேசுவது ஏற்புடையதல்ல என்றும் அவர் கூறினார்.

"பொறுப்பு என்றால் என்ன என்பதை யாரையும்விட எங்களுக்கு நன்றாக தெரியும்," என்று அவர் கூறினார். அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்த கருத்து தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார். (ம-3)

## கீரிமலையில்...

சொந்தமான சுமார் 0.6474 ஹெக்டேயர் காணிகளை சுவீகரிப்பதற்கு இன்று செவ்வாய்க்கிழமை அளவீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ளது.

கீரிமலை நகுலேஸ்வரம் ஜே/226 கிராமசேவகர் பிரிவில் இன்று காலை 8.30 மணிக்கு குறித்த காணி சுவீகரிப்பிற்கான அளவீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ளது. காணி உரிமையாளர்களின் ஒப்புதல் இல்லாமலே அளவீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ள நிலையில் காணி அளவீட்டைத் தடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காணி உரிமையாளர்கள் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல்வாதிகள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ம-3,18)

## தீபாவளி கொத்...

தீபாவளிக் கொத்தணி ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் எச்சரித்துள்ளார்.

நாட்டில் கடந்த ஒரு வாரமாக கோவிட் தொற்றாளர் எண்ணிக்கை வீழ்ச்சியில் மந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே தீபாவளி பண்டிகை, திருமண வைபவங்கள் மற்றும் மரணச் சடங்குகள் உள்ளிட்டவற்றில் பங்குபற்றும்போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுவது அவசியம் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நாம் மீண்டும் பழைய முடக்க முறைமைக்கு செல்வதற்கு தயாராகின்றோமா? அல்லது நாடு என்ற ரீதியில் முன்னோக்கிச் செல்கின்றோமா? என்பதை நாமனைவரும் பொறுப்புடன் செயற்படுவதன் ஊடாகவே தீர்மானிக்க முடியும் என்றும் வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் வலியுறுத்தினார். (ம-3)

## புதிய அரசை...

விடுத்துள்ளார்

தொடர்ந்தும் ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க தாம் தயாரில்லை என்று குறிப்பிட்ட அவர், அரசாங்கம் தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து வருவதாக குறிப்பிட்டார்.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாக தெரிவித்த அவர், எதிர்காலத்தில் அரச பணியாளர்களுக்கு வேதனங்களை வழங்குவதற்கு கூட இயலாத நிலை ஏற்படலாம் என்று குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வடக்...

குறித்து வடக்கு மீனவர் தரப்பில் இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லே யுடன் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஏற்பாட்டில் குறித்த சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

மீனவர்கள் சார்பான பிரதிநிதிகளான, வட மாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் தலைவர் சுப்பிரமணியம், உப தலைவர் பிரான்சிஸ், பொருளாளர் மரியராசா, தேசிய மீனவர் நல்லிணக்க வடக்கு - கிழக்கு இணைப்பாளர் அன்ரனி யேசுதாஸன், முல்லைத்தீவு அன்னை வேளாங்கண்ணி கடல்தொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவர் அருள்நாதன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ம-3)

## தமிழ் - முஸ்லிம்...

நாம் நன்கறிவோம். ஒரு சில காரணிகளை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் பிரதிநிதிகள் செயலணியில் உள்வாங்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ் உறுப்பினர்கள் நியமனத்தில் சிக்கல் நிலை காணப்படுகிறது. அதாவது கண்டியில் உள்ள ஒருவரை நியமிப்பதில் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் விரும்புவதில்லை.

ஆகவே எதிர்வரும் காலத்தில் செயலணியின் உறுப்பினர் நியமனம் பரிசீலனை செய்யப்படும். தமிழ் பிரதிநிதிகள் இல்லை என போர்க்கொடி தூக்கும் தமிழ் அரசியல்வாதிகள் இந்துக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கட்டாய மத மாற்றம் தொடர்பிலும், மதமாற்றம் தடைச் சட்டம் தொடர்பிலும் ஏன் இதுவரை கவனம் செலுத்தவில்லை என ஒரே நாடு - ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1157
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 1 9 6 3 4 5
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 01/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0921
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்
N 13 36 72 76 80

மஹஜன சம்பத
திகதி 2021/11/01
சீட்டிழுப்பு இலக்கம் 4573
T 3 7 7 7 9 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 01.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2868
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
P 40 42 54 65
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.11.01
சீட்டிழுப்பு இலக்கம் - 603
P 08 39 49 63
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7800 / 011 232 4334

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1376
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 01.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,154,140
வெற்றி இலக்கங்கள் 01 35 56 59
ஆங்கில எழுத்து B
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
சீட்டிழுப்பு இல: 0711
சீட்டிழுப்பு திகதி: 01.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,576,440
வெற்றி இலக்கங்கள் 10 15 28 68
ஆங்கில எழுத்து N
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1550
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2021 / 11 / 01
தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
L 32 37 43 67
Total Value of Prizes 2,383,020/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,831,113/-
திகதி 2021 / 11 / 01
வெற்றி வாரம் 3262
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 16 25 57 61
தனுசு
Total Value of Prizes ரூ. 8,184,400/-

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1781
சீட்டிழுப்பு திகதி 2021 / 11 / 01
வெற்றி இலக்கங்கள் 03 30 35 60
ஆங்கில எழுத்து R
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 27,480,712/-
தொ. பே.: 0112 339 543/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் சமுர்த்தி வங்கி வீதியில் 3 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட ஒரு துண்டும் 1 3/4 பரப்பாக பிரிக்கப்பட்ட ஒரு துண்டும் 14 அடி பாதையுடன், மருதடி விநாயகர் கோவிலில் இருந்து 700 மீற்றர் தூரம்.

பார்வையிடும் நேரம்

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (8472)

**077 814 7389, 077 614 7333**


## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான பெண்கள் கல்லூரிக்கு பின்வரும் பதவி நிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- தையல் போதனாசிரியர்
- ஆரி எம்பிராய்டரி (Aari Embroidery ) போதனாசிரியர்
- அழகுக்கலை போதனாசிரியர்
- கேக் ஐசிங் போதனாசிரியர்

NVQ தகைமை அல்லது முன் அனுபவம் உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் தொழில் அனுபவம் மற்றும் கல்வித் தகைமையை குறிப்பிட்டு சுயவிபரக் கோவையை WhatsApp or E-mall இற்கு அனுப்பி வைக்கவும். (C-2929)

lankaguideedu@gmail.com | WhatsApp 076 135 4500


## கனடாவில் உடனடி வேலைவாய்ப்பு

### கடல் தொழிலாளர்கள்

மீன்பிடித்தலில் அனுபவம் உள்ளவர்கள்
கடல் சார் கற்கை நெறிகள் சான்றிதழ்கள்
வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**Cook** மேலை நாட்டு உணவு தயாரிப்பில் அனுபவம் உள்ளவர்கள்

ஏனைய வேலைவாய்ப்புக்கள்

- Industrial Butcher
- Carpenter
- Welder
- Furniture
- Electrical power line & cable workers
- Industrial Electricians
- Electricians
- Plumber
- Food Service Supervisor
- Administrative assistant

தகுதிகள்:- A/L PASS / DIPLOMA/DEGREE ஆங்கில அறிவு

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். (C-2923)

**0777-068-777**



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**



## விரைவு பொதிகள் சேவை
# V2 TRAVELS
**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2918)

**0768226240** DHL



A/L 2021 பொதுச் சாதாரண தரப் பரீட்சை Zoom மூலமான வழிகாட்டல் வகுப்பு. பொது அறிவு, பொது உளச் சார்பை உள்ள டக்கிய வினாத்தாள். அனுபவம்மிக்க வளவாளர் வேதநாயகம் தபேந்திரன் (B.Com, PGD PDS, MA), 03.11.2021 புதன்கிழமை இரவு 7 மணி முதல் 8 மணி வரையும். (C-2915)

Meeting ID : 817 4117 8283 Passcode : 12345

**076 698 2219**


## சிறுநீரகம் தேவை

O,B குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு (8471)

**076 239 9874**

## பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலியில் வசிக்கும் வயோதிப மாது ஒருவரை பராமரிக்க பணிப்பெண் தேவை (8466)

(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

**021 492 2076**
**071 900 2793**


நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் **03** நாட்களே

## அமெரிக்க அதிஸ்ட விசா



ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து கிடைக்காமல் அலுத்தக்கொண்டால் இந்தத்தடவை உங்களுக்குரிய வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள் என எடுத்துக்கொள்ளலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

**காத்திருக்காமல் உடனே பதியுங்கள்**

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

**55000** இலவச விசாக்கள்

**0768226244**

V2 Travels மூலம் அமெரிக்க அதிஸ்ட லொத்தர் விசாவிற்கு பதிந்து அதிஸ்ட சாலியாக தெரிவு செய்யப்பட்டேன். அந்த கணத்தில் இருந்து எனது வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை உணர்ந்தேன். என்னை மதிக்காதவர்கள் கூட என்னை தேடிவந்தார்கள். (C-2919)



கடைசிவரை கூடவே துணையிருந்த V2 Travels க்கு எனது நன்றிகள்.

கலைச்செல்வன்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

**V2 Travels**

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


## வேலை ஆள் தேவை

சாய் சபரீசன் பூஜை பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு பெண் வேலை ஆள் தேவை.

(கோண்டாவில் ஐயப்பன் ஆலயம் எதிரில்) (8462)

**077 310 8671**
**077 711 0629**

## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள கடையொன்றிற்கு வேலையாட்கள் தேவை. ( இருபாலாரும் )

வயதெல்லை 19 – 30

[ சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள ஆண்கள் விரும்பத்தக்கது. ] (8463)

**077 713 4777**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்



கடந்த 04.10.2021 அன்று காலஞ்சென்ற எமது குடும்பத் தலைவர்

அமரர்

## கதிரிப்பிள்ளை செல்வராசா

அவர்களது அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (03.11.2021) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் முற்பகல் 11.00 மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்பர்கள் யாவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

(C-2931)

நெல்லியடி 076 532 5338 குடும்பத்தினர்

# 17ஆம் ஆண்டு நினைவுப்பூக்கள்

மலர்வு 10 . 05 . 1946



உதிர்வு 02 . 11 . 2004

அமரர் **கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்**

( கோட்டக்கல்விப் பணிப்பாளர், ஊர்காவற்றுறை )

*மனதை விட்டகலா - அந்த*
*மழைக்கால நினைவலைகள்!!*
கொட்டிய மழையில்
வயல்களில் தேங்கிய வெள்ளநீர்
இரவுகளை கிழித்து இசைமீட்டும்
நுணல்களின் ரீங்காரம்!
மின்விளக்கு ஒளிகண்டு மடைதிறந்து
படையெடுக்கும் புற்றீசல் பேரணி!
பாலப்பருவமதில் பேச்சில் வடிக்க
முடியாததோர் ஆனந்தம் - எமக்கென்றால்,
அப்பாவுக்கு? பேரானந்தம்!!
பாசமுடன் எமக்கான படுக்கைகளை
தயார் செய்தல்
பல்லுக்கு இதமான நொறுக்குத்தீனி
கஞ்சாங்கோரைப் புகையுடன்
வேப்பிலையும் கமகமக்கும் எங்கள் வாசலில்
வலைகளில் புகுந்துவிடும் கொசுக்களை
விரட்ட, இரவு நேர காவல்காரனாய்
அத்துணையும் செய்து நாம் இதமாக
தூங்கும் அழகு கண்டு அகம் நெகிழ்ந்த
எங்கள் அப்பா! இன்று எம்முடன் இல்லை.
காலச்சக்கரத்தின் வேகச் சுழற்சியில்
அவர் நினைவுகளை சுமந்து கடந்து
செல்கின்றோம்.
கோடி உடுக்களின் நடுவே
பிரகாசமான ஒரு விண்மீனாய்
எங்கள் அப்பா!!

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

(8473)

நின் மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.